## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2013/2014 (ஒக்டோபர்/நவம்பர் 2016)

# FAS 3213 Art of Film Appreciation – Short films and Documentary Film

நேரம் : **03 மணித்தியாலங்கள்**

LIBRARY
0 - MAY 2017
EASTERN UNIVERSITY, SRI LANKA.

(புள்ளிகள் 25x4=100)

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

---

01. 'விவரணப்படங்கள் எப்போதும் உண்மையைச் சொல்வன', விமர்சன ரீதியில் ஆராய்க.

02. முழுநீளத் திரைப்படங்கள் (Feature Films), குறும்படங்கள் (Short Films), விவரணப்படங்கள் (Documentary) மற்றும் விவரண நாடகங்கள் (Docu Dramas) ஆகியவற்றை அவற்றின் சிறப்புப் பண்புகளின் அடிப்படையில் வேறுபடுத்துக.

03. விவரணப்படமொன்றை உருவாக்குவதில் ஆய்வின் (Research) முக்கியத்துவத்தை, விளக்குக.

04. உலகின் முதல் விவரணப்படம் எனக் கருதப்படும் 'Nanook of the North'யை கருத்திற்கொண்டு, கதை சொல்லல்' உத்தியை அவ்விவரணப்பட இயக்குநர் ரோபர்ட் ஃப்ளகெற்றி கையாண்டிருக்கும் வழிமுறைகளை உதாரணங்களுடன் விவரிக்குக.

05. 'விவரணப்படங்கள் வரலாற்றுப் பெறுமதிமிக்க ஆவணப்படங்களாகவும் அமையும்.' இன்றைய இலங்கைச் சூழலில் தமிழ்பேசும் விவரணப்பட இயக்குநர்கள் விவரணப்படங்களை உருவாக்குவதற்கு எடுத்தாளக்கூடிய ஐந்து (05) கருப்பொருட்களைப் பட்டியலிட்டு அவை ஆவணப்படுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை ஆராய்க.

06. ஆனந்த் பட்வர்த்தனனின் 'கடவுளின் பெயரால்' (In the Name of God' or 'Ram Ke Naam') விவரணப்படம் எடுத்துச் சொல்லும் மத அடிப்படைவாதம் மற்றும் அமுதனின் 'பீ' (Shit) விவரணப்படம் பேசும் சமூக அவலம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு விவரணப்படத் தயாரிப்பாளர் ஒருவருக்கு இருக்க வேண்டிய அவசியமான பண்புகளை எடுத்துரைக்க.

*******